தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை- 600 006.

ந.க.எண்.64854/கே/இ1/2012, நாள்.12.10.2012.

...

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம்- 2005- திரு.கோ.இளங்கோ, கரூர் மாவட்டம் என்பார் சில தகவல்கள் கோருதல் குறித்து.

பார்வை : 1) அரசு கடிதம் எண் . 32846/இ2/2012-1, நாள். 26.09.2012 வழியாக பெறப்பட்ட திரு.கோ.இளங்கோ என்பாரின் மனு.

.....

மனுதாரருக்கு இனம் 1 மற்றும் 2 க்கு கீழ்க்கண்டவாறு தகவல் வழங்கப்படுகிறது.

1) சேலம் விநாயகா மிஷன் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, தமிழக அரசின் ஒப்புதல் அளித்த ஆணை இதுவரை பெறப்படவில்லை என்பதால் ஊக்க ஊதிய உயர்வு பெற வழிவகை இல்லை என்ற தகவல் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

தகவல் வழங்கும் அலுவலர் மற்றும்
இணை இயக்குநர் (தொழிற்கல்வி)

www.crsttp.blogspot.com

## கல்லூரிக் கல்வித்துறை

அனுப்புநர்
திரு. சு.ஜெயபாஸ்கரன் எம்.ஏ.எம்பில்
கல்லூரிக் கல்வி இயக்குநர்
சென்னை- 600 006

பெறுநர்
பி.விஜயலட்சுமி
27,கிருஷ்ணாராவ் முதல் தெரு
திண்டுக்கல்-1

ந.க.எண்.39225/ஜெ4/2009

நாள்: 07.12.2009

அய்யா,

பொருள் : பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு பதவி உயர்வுக்கு, ஊதிய உயர்வுக்கு தகுதியுடையதா கேள்விக்கு பதில் அளித்தல் குறித்து.

பார்வை : தங்களது 15.10.2009 நாளிட்ட கடிதம்

-

பார்வையில் காணும் தங்கள் கடிதத்தில் சேலம் விநாயகா மிஷன் திறந்த வெளிப் பல்கலைக்கழகம் மூலம் 2006-2007 கல்வி ஆண்டில் எம்.பில் பயின்று பட்டம் பெற்றமைக்கு பதவி உயர்வுக்கு தகுதி உடையதா, ஊக்க ஊதிய உயர்வுக்கு தகுதி உடையதா என்று தெரிவிக்குமாறு வேண்டியுள்ளீர்கள். புது டெல்லி பல்கலைக்கழக மானியக்குழு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் என்பதால் இப்பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் அனைத்து பாடங்களும் அரசுப் பணிக்கு தகுதி பெறுகிறது. தங்கள் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இடம் பெறுவதால் (வரிசை எண். 23ல் குறிப்பிட்டுள்ளது நகல் இணைக்கப்பட்டுள்ளது) M.Phil, Phd பட்டப்படிப்புக்கு பதவி உயர்வுக்கும் தகுதியும், ஊக்க ஊதிய உயர்வுக்கும் தகுதியும் உடையதாகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பொது தகவல் அலுவலர்.

www.crsttp.blogspot.com